# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்



பதிப்பாசிரியர்கள்
**முனைவர் க. முருகேசன்**
**முனைவர் சு. இராமலிங்கம்**

# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஜூலை, 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி அச்சாக்கம் | : | **பிரடாக் பிரிண்ட்,**<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | XVI + 416 = 432 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 81 - 932327 - 8 - 1**


# International Conference on Art and Ideology of Dr. N. Subbu Reddiar


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan.**<br>**Dr. S. Ramalingam** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | July, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer Printing at | : | **Prdag Print**<br>476/1, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XVI + 416 = 432 |
| Prize | : | **Rs. 350/-** |

61. **இரா. வாணிபிரப்பா** 312
ந.சுப்புரெட்டியார் பார்வையில் சகோதரத்துவம்

62. **முனைவர். மு. ருக்மணி** 316
ந.சுப்புரெட்டியாரின் உணர்ச்சியின் தத்துவம்

63. **வே. அம்சவேணி** 321
ந.சுப்புரெட்டியார் "சைவ சமய விளக்கு" நூலில் சித்தாந்தக் கூறுகள்

64. **முனைவர் ச. அரிச்சந்திரன்** 326
ந. சுப்புரெட்டியார் பார்வையில் கவிதைப் படைப்பாக்கம்

65. **முனைவர் ஆ. சரவணன்** 331
ந. சுப்புரெட்டியார் பார்வையில் 'அர்ச்சிராகதி'

66. **முனைவர். நா. கீதா** 335
அர்த்த பஞ்சக ஞானம்

67. **முனைவர் எஸ். குமரன்** 340
ந. சுப்பு ரெட்டியார் உணர்த்தும் தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை

68. **முனைவர் த.பிரியா** 345
ந.சுப்புரெட்டியார் உள்ளத் தெருக்களில் உலா வரும் கவிதையனுபவம்

69. **மு. ஷாஜஹான்** 350
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் ஐந்திணை நெறிகளும் இடந்தலைப்பாடும்

70. **இரா. மாலினி** 354
ந.சுப்புரெட்டியார் பார்வையில் பாஞ்சாலி சபதக் கதை மாந்தர்கள்

71. **முனைவர் இரா. மணிமேகலை** 359
சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம் - நூல் ஆய்வுரை

72. **முனைவர் ச. கவிதா** 365
பாரதி இயல் ஆய்வில் பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் பங்களிப்பு

73. **முனைவர் கு. முத்துக்குமார்** 370
ந. சுப்புரெட்டியாரின் மெய்யியல் பார்வை

74. **வெ. மைதிலி** 376
ந. சுப்புரெட்டியாரின் கவிதைச் சிந்தனைகள்

75. **முனைவர் சு. சதீஷ்குமார்** 379
ந.சுப்புரெட்டியார் காட்டும் திருக்கோயில் தத்துவம்

# 73. ந. சுப்புரெட்டியாரின் மெய்யியல் பார்வை

**முனைவர் கு. முத்துக்குமார்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,*
*கோயம்புத்தூர் - 641 029.*

மாந்த இனம் தம்மை நெறிப்படுத்த தமக்கான பண்பாட்டுக் கோட்பாடுகளை உருவாக்க முயன்றதன் அடையாளமாகச் சமயங்களைக் காண முடியும். ஒவ்வொரு இனமும் தான் வாழ்ந்த நிலத்தை முதன்மையாக் கொண்டு தனக்கான ஒழுக்கங்களை வகுத்தன. தமிழர்களும் தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையைத் திணைகளாகப் பகுத்துச் செம்மைப்படுத்தி உலக நாகரிகத்திற்கு முன்னோடியானார்கள். மனிதன் தனது தேடலை இவ்வுலகில் மட்டுமல்லாமல் இம்மைக்கும் மறுமைக்குமெனத் தேடலாகக் கொண்ட போது சமயங்கள் தோன்றின. மக்கள் வாழ்வியலிலிருந்து தனக்கான மெய்யியலை அடையாளம் கண்டு தனது வாழ்க்கை மூலமாகவும், படைப்புகள் மூலமாகவும் வெளிப்படுத்தினர். நம்பிக்கைகளின் அடிப்படையிலும், இடம் பெயர்ந்து சூழலை எதிர் கொண்ட நிலைப்பாட்டிலும், அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்தினாலும் சமயங்கள் உருவாக்கப்பட்டன. மனிதனின் பார்வையை விடுத்து அண்டத்தின் இயக்கத்திற்கும், மனித வாழ்வின் இயக்கத்திற்கும் உள்ள உறவைத் தேடுவதற்குச் சமயங்கள் தேவைப்பட்டன. இவ்வாறான சூழலில் சுப்புரெட்டியார் தனது ஆய்வுக் கட்டுரைகள், வழியாக உலக மெய்யியலை முன் வைத்து மதத்தை மையமாக்கிச் சுழலும் இம் மனித வாழ்வை அவரவர் பார்வைகளிலிருந்து வெளிப்படுத்தும் விதத்தை இக்கட்டுரை ஆராய்கிறது.

சுப்புரெட்டியார் தனது நூற்றுக்கும் மேற்பட்ட படைப்புகளில் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகள், திறனாய்வுக் கட்டுரைகள் எனப் பல்வேறு பட்ட பரிமாணத்துடன் இவரின் தேடல் தொடர்கின்றது என்பதை நாம் உணர முடியும். இயல்பாகவே அவர் அறிவியல் மாணவர் என்பதால் அனைத்தையும் அறிவியல் பார்வையில் பார்த்ததோடு மட்டுமல்லாமல் திறனாய்வு என்பதும் வரலாறு என்பதும் அறிவியலோடு நெருக்கமானதாக இருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். சமயம் சார்ந்த கருத்துகள் மனிதனைச் சிந்திக்க வைக்க வேண்டுமே ஒழிய சமயக் கருத்துக்களை முடிந்த முடிபாகக் கொள்ள வேண்டியதில்லை என்பதை மெய்ப்பிக்கிறார். மனித இனத்தில் எழுந்த இலக்கியங்களையும், சமயங்களையும் அறிவியல் பார்வைக்குட்படுத்தி மெய்யியலை வெளிக் கொணர்கிறார்.